125

உ

பதிவு எண் — M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு.- சான்றாண்மை இதழ்.

1 JAN 1956 MADRAS

125/1-56

ஆசிரியர்: இளவழகனார்.

கிளை—8 குருகுலம், மாம்பாக்கம்; மன்மத, கார்த்திகை, கூ 25—11—55 தளிர்—5

திருவள்ளுவர் செய்தி – 4

குருகுலத்தார்க்கு

திருக்குறள், ஒரு நூல், மாந்தர் இனத்துக்கு அறம் கூறும் நூல்! பிறவி எடுத்த மக்கள் பிறவி தீரும் வரையில் எப்படி நடந்துகொள்ள வேண்டுமோ. அந்நடத்தைகளை எல்லார்க்கும் இணங்க எடுத்து விளக்கும் நூல்! தலைசிறந்த ஒழுக்க நூல், வாழ்க்கை விளக்க நூல், வாழும் முறை இப்படித்தான் இருக்க வேண்டும் என்று திட்டமாய்த் தெளிவிக்கும் நூல்!

இத்தகைய மாபெரும் வாழ்க்கை மறையின் ஒரே கருத்து, அதாவது உள்ளுறை, 'அறம்' என்பது. அறத்தை விரிந்துத்தான் திருக்குறள் 'அறநூல்' என்றே பெயர் பெற்றது.

திருக்குறள் தோன்றியபின் அறத்தின் முதன்மை உலகமக்கள் உள்ளத்தில் இடம் பெற்று விட்டது. திருவள்ளுவர் நூலை அவர்க்குப்பின் எழுந்த அறிஞர், 'அறம்' என்றே வழங்கினர்.

"அறம் பாடின்றே" என்பது புறநானூறு; இங்கே அறம் என்னும் சொல், திருக்குறள் நூலுக்கு வந்தது. இதனால் திருக்குறள் மொழிகள் அவை தோன்றியதிலிருந்து எல்லார்க்கும் ஆணை உரைகளாகவே, அதாவது கட்டளை மொழிகளாகவே, போற்றிக்கொள்ளப்பட்டன என்பது தெளியப் பெறும். அத்தகைய அறநூல் திருக்குறள்!

இப்படித் திருக்குறளில் அமைந்து கிடந்து, மாந்தர் வாழ்க்கைகளை இயக்கி ஒளி பெறுவிக்கும் கருத்து அறம் என்றால், அது எவ்வளவு வலிமை உடையதாய் இருக்க வேண்டும். அந்த வலிமையை விளக்கி, மக்கள் உய்யுமாறு திருவள்ளுவர் அளித்திருக்கிறார்.

மக்களுக்குத் திருவள்ளுவர் வழங்குகிற மணிவிளக்கு, அறம் என்பதுதான். அது பிறவிக் கடலுக்குக் கலங்கரை விளக்கம்!

ஆகவே, வாழ்க்கையில் அனைவரும் மறவாமலும், தளராமலும், இடையறாமலும் கடைப் பிடிக்க வேண்டுவது அறம் ஒன்றே என்று, சற்றும் ஐயமின்றித் துணிந்துகொள்ளலாம்.

அறத்தை விட ஆக்கம் உயிர்க்கு வேறு இல்லை. அது அழியாதது; வாழ்க்கையூடு எந்நிலை யிலும் விரவிப் பயன் தருவது; அமைதியும், இன்பமும், புகழும், சிறப்பும், உரிமையும் போன்ற எல்லாம் அளிப்பது!

அறம் என்பது, தூய உள்ளம் தூய சொல் தூய செயல்களை அடிப்படையாகக் கொண்டு உலகுக்குப் பயன்படும் வகையில் நிகழும் உண்மையான நற்செயல்கள்! இதனை அறவினை என்றும், நற்செயல் என்றும் திருவள்ளுவர் தெரிவிக்கின்றார்.

எது அறம் எது அறம் அல்லாதது என்று கண்டுகொள்வதற்கும் ஒரு குறிப்பு அவர் கொடுக்கின்றார். உயர்ந்தோரால் பழிக்கப்படாதது எதுவோ அது அறம் என்பது அவர் கருத்து. இதனை, அவ்வுயர்ந்தோர் நடைமுறையிலிருந்தும் தெரிந்துகொள்ளலாம்.

அறத்தால் உலகம் உய்ய வேண்டி யிருக்கின்றது; அறத்தால் உலகம் நடைபெறுகின்றது. ஒவ்வொருவர் உள்ளமும் இல்லமும் அறம் தழைத்து ஓங்குவதாக!

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

8-ம் ஆண்டுக் கையொப்பம்
(28-10-55 முதல்)

உள்நாடு	ரூ.	4 0 0
வெளி நாடு	ரூ.	6 0 0
தனித் தாள்	ரூ.	0 1 0
ஆயுள்—		
கையொப்பம்	ரூ.	100 0 0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம் P. O.
(தென்னிந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"

—புறநானூறு.

கிளை 8	மன்மத, கார்த்திகை, 25-11-55 வெள்ளி.	தளிர் 5

நடுநிலை யாளர்

கருத்துகள் உயர்ந்து வாழ்க்கையும் உயர்கின்றது; அறம் உயர்ந்து வாழ்க்கை ஒளிவிடுகின்றது!

கருத்துக்களும் அறமும் இணைந்து இயங்கும் உலகமே நாகரிக உலகம்! நடுநிலை யுள்ளம் உடையவர்க்கு இந்த நாகரிகம் உண்டு; அவர் சான்றோர்!

பண்பு நிறைந்த பெரியவர்கட்கே தக்கபடி நடு நிலைமை கையாள முடியும்; இடுக்கண் நேரத்தில் நடுநிலைமையைக் கடைப்பிடிக்க எவ்வளவோ துணிவும் வீரமும் உண்மை அடிப்படைகளில் அழுத்தமும் வேண்டும்; திட்ப நுட்பமான அகவலிமை அருள்வலிமை உடையவர்க்கல்லால் இவை கூடுவதில்லை.

நாடுகளில் பற்பல காரணங்களால் கிளர்ச்சிகள் குழப்பங்கள் இவற்றின் விளைவுகள் உண்டாகின்றன; இவற்றை அவ்வப் போதும் ஒழுங்கு செய்வது ஆட்சியாளர்க்குப் பெருந் தலைவலியாயுள்ளது. முன்பெல்லாம் இப் பொறுப்பைச் சான்றோர், தாமே மேற்கொண் டிருந்தனர்; அதற்கு அரசின் ஆதரவு இருந்தது.

குடிமக்களுக்கும் ஆட்சியினர்க்கும் கருத்திணக்கம் எப்போதும் நிலைபெற்றிருக்கும்படி சான்றோர் சந்தி செய்து வந்தனர். நாட்டுத் தொண்டு என்பதே அப்போது ஔவையார் கோவூர் கிழார் போன்றோர் கைவண்ணமாய் இருந்தது.

பதவியிலிருக்கும் அதிகாரத் தலைவர்களோ குடிமக்களாகிய பொதுமக்களோ நடுவுநிலையில் நிற்றல் என்பது அருமை. இரு திறத்தார்க்கும் வேறுபட்ட, பண்பும் அருளும் நிறைந்த சான்றோர்க்கே அது கைகூடுவதாகும்.

சான்றோர் பெருமக்களின் நடையிலிருந்துதான், அவர் திருவுள்ளக் கட்டளையிலிருந்து தான், 'நடுவுநிலைமை' இன்னது என்பதும், 'நீதி முறைமை' இன்னது என்பதும் யாரும் துணிய முடியும். சட்ட நூல்களை விட, இப் பெருமக்களின் வாய்மொழியே வன்மை மிக்கது; பெருமைமிக்கது!

திறமையும் பண்பும் முறைமையும் மிக்க சான்றோரை முற்கொண்டு, அரசும் நாடும் தம் வாழ்வை மிகுத்துக் கொள்ளுமாக!

திருச்செந்தூர்ப் பத்து

(பேராசிரியர் பாரிப்பாக்கம், கண்ணப்ப முதலியார்)

பூவைகளும் கிள்ளைகளும்
பொலிந்திலங்கு வளங்குலவு
பொழிற் செந்தூரின்
தேவர்புனை மணிமாட
நெடுங்கோயில் எழுந்தருளித்
தெய்வக் கஞ்சச்
சேவடியைத் தொழும்
அமர வாழ்வளித்த தேவேஎன்
சிந்தை மன்னும்
ஓவியமே மனமுருக்கும்
உள்ளொளியே ஒளிவடிவின்
ஓங்கும் தேவே 1.

கண்டவர்தம் கண்களொடு
மனங்கவரும் கருணையுருக்
கொண்டு நின்றே.
தண்டமிழ்த்தேன் அலங்கல்புனை
தமிழ்வாணர் விழைவருளித்
தமிழ் மணக்கும்
எண்டிசையும் அருள்மணத்தின்
எழிலொளிசெய் திருச்செந்தூர்
எந்தாய் என்றன்
பண்டைவினை அதுமாற்றிப்
பதிஞான நிதியளிப்பாய்
பரம தேவே. 2.

மடல்சூழ்ந்த மலர்த்தாழை
மணஞ்சூழ்ந்து மணிவளத்தின்
மாட்சி சூழ்ந்த
கடல்சூழ்ந்துன் கழலிணையின்
அலையென்னும் மலர்தூவிக்
கதிநீ என்னு
உடல்சூழ்ந்த உயிரனைத்தும்
உணர்ந்திடுமா ஒலித்தென்றும்
ஒளிரும் செந்தூர்
அடலேறே அருட்கடலே
அமிழ்துருவின் தமிழ்ப்பிழம்பே
அமலத் தேவே. 3.

அளக்கரிய பெருங்கடலின்
அருங்கலங்கள் நடத்துநர்கள்
அறிந்து செல்லத்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

அருட்பெருஞ் சோதி அகவல் பேருரை

உரையாசிரியர்: இளவழகனார்.

அகவல் மாட்சி:

வள்ளலார் திருவருட்பாவில், தலைமணி போல விளங்குவது அருட்பெருஞ்சோதி அகவல். அது "ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதி"யின் அருமை பெருமைகளையும், எளிமை இனிமைகளையும் விஞ்ஞான வழியிலும் மெய்ஞ்ஞான நிலையிலும் பலபடியாக விரித்து விரித்து விளக்குகின்றது.

பேருரை முயற்சி:

அருட்பெருஞ் சோதி அகவலை முறையாகப் பலர் குருவாரந்தோறும் திருவடிப் புகழ்ச்சியுடன் பாராயணமாக ஓதிவருகிறார்கள்; அது மேலு மேலும் சிறக்கும் பொருட்டு அகவலுக்கு விளக்கவுரை வெளியிடும் முயற்சியும் திருவருளால் இப்போது **மாம்பாக்கம் குருகுலத்தில்** (மதுராந்தகம் அஞ்சல்) மேற்கொள்ளப்பெற்றிருக்கிறது!

வெளியீட்டு வகை:

அகவல் விளக்கங்கள் பகுதி பகுதியாக மாதம் ஒன்றுக்குக் கிரவுன் 32-பக்கங்கள் அளவில் வெளிவருகின்றன. ஓர் ஆண்டுக்கு இப்படி 12 பகுதிகள் கிடைக்கும்.

முதல் பகுதி, வள்ளலார் பிறந்த நாள் புரட்டாசி 30 (16-10-55)-ல் வடலூரில் வெளியிடப்பெற்றது.

ஆர்வமுடையோர் தம் பெயரை, உரிய முகவரியுடன், சேர்க்கைக் கட்டணம் ரூபா 2; ஆண்டுக் கையொப்பம் ரூபா 3; ஆக ரூபா 5-(ரூபா ஐந்து மட்டும்) செலுத்தி, குருகுலத்திற் பதிவு செய்துகொள்வார்களாக! **இவ்வாறு பெயர்ப் பதிவு செய்துகொள்ளாதவர்க்கு இவை கிடைக்க** மாட்டா. ஒரு பகுதி பெறுவோர் எல்லாப் பகுதிகளும் பெறுதற்குரியர்; ஆதலின் சேர்க்கைக் கட்டணம் உண்டு; அது, அஞ்சற் செலவுக்குக் கணக்கீடு செய்யப்படும்.

பெயர்ப் பதிவுக்கு:

சென்னையில்:	மாம்பாக்கத்தில்:
திரு. ஆறுமுகம் அவர்கள்,	குருகுலம், மாம்பாக்கம்;
31. முல்லா சாயபு தெரு,	மதுராந்தகம் (அஞ்.)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

துளக்கமிகு கரைகாட்டும்
தூயகலங் கரைவிளக்கச்
சுடரின் என்றும்
களக்கமுறு பெரும்பாசக்
கடல்கடக்க நடத்துகலன்
கரையிற் சேர
விளக்கமுறும் அலைவாயில்
விளங்குகின்ற மணிவிளக்கே
விமலத் தேவே. 4.

உவாமதியம் ஒளிவீச
ஓங்குகடல் அலைவீசும்
ஒப்பில் காட்சி
அவாநிலையால் அரவணையான்
பாற்கடல்நின் அடியணைந்த
அழகு காட்டும்
தவாவனம்பின் அலைவாயில்
தழைத்தோங்கும் செம்பவளத்
தனிப்பொற் குன்றே.
சிவாயநம என உருகும்
சிந்தைமலர் எழுந்தருளும்
தேவ தேவே. 5.

இமயமுதல் மலைகளெலாம்
மையாக்கி இலங்கு கடல்
தனிற் கலக்கி
அமைவுருநற் கற்பகத்தின்
அழகிலகு கோடதனுல்
அகிலம் வானம்
தமையேடாக் கொண்டுகலை
மகள்தானே தளராது
வரைவ ளேனும்
உமைமகநின் திருவடிச்சீர்
உலவாதால் அலைவாயின்
ஒளிரும் தேவே. 6.

கலைவளர்நின் அறிவகலம்
ஆழமிவை காண்பரிதாக்
காட்டு தற்கோ,
நிலைவளர்நின் பேரின்ப
நிலைவளத்தின் பெருக்கதனை
நிகழ்த்து தற்கோ,
மலைவளரும் குறிஞ்சிநிலத்து
உரிமைமிக மகிழ்ந்தருளும்
மயில்வேல் மன்னு!
அலைவளரும் பெருவாயில்
நின்றகருத் தறிகிலமால்
அருளின் தேவே! 7.

பலகலையின் முடிபொருளாய்ப்
பரந்தொளிர்நின் பாதமலர்
படியிற் றோய
அலைகடலின் ஒலியடங்கா
அலைவாயின் அமர்ந்தருளல்
ஆய்ந்து நோக்கின்
நிலைகலங்கா தொருமனத்தால்
நீளிரவு பகலெல்லாம்
நினைந்த ரற்றின்
கலைநிறைநம் உருக்காட்டி
ஆள்வமெனக் காட்டுதலோ
கருணைத் தேவே. 8.

தெள்ளுதமிழ் நக்கீரன்
தமிழ் மகிழ்ந்தே இன்பளித்த
செல்வா நின்றன்
அள்ளரிய கருணையமு
துண்டுலகில் அலகிலகு
தமிழ்மும் மாரி
வெள்ளமிகப் பொழிந்துலவ
விழையுமலர் மிடியென்னும்
இடும்பை நீக்கி
உள்ளமகிழ் செம்பொனளித்
தொளி செய்வாய் உம்பரளித்
தொளிரும் தேவே. 9.

அமிழ்தனைய தமிழ்மொழியின்
ஆசிரியன் எனவிளங்கும்
அரசே என்றும்
தமிழ்நிலத்தின் இறைவடிவாத்
தழைத்தோங்கும் செங்கதிரே
தனிச் சிறப்பின்
தமிழ்க்கலையும் தமிழ்க்கலைதேர்
புலவர்களும் தலைசிறந்த
ஒளியி னோங்கித்
தமிழ் வளத்தின் நனிவாழத்
தலையளிப்பாய்திருச்செந் தூர்த்
தருமத் தேவே. 10.

கலைப் பகுதி:

மரவினமும் பிறவும்:

ஈரறிவு முதல் ஆறறிவு காறும் உள்ள பல்வகை உயிரினங்களும் ஒரே பிரிவில் அடங்கிவர, ஓரறிவு உயிராகிய மரவினம் மட்டும் ஒரு தனிப் பிரிவாக வைத்து மதிக்கப்படுதல் ஒரு பெரும் வியப்பை யன்றோ உண்டாக்குகின்றது. அறிவில் மிகக் குறைவாயிருந்தும் அவ்வளவு தனி மதிப்புப் பெற்று விட்டதே மரவினம்! ஏதோ அதனிடத்தில் தனிப்பெருமை இருக்கத்தான் வேண்டும்.

மரவினம் மட்டும் இருக்குமிடத்திலேயே இருந்து தன் வளர்ச்சிகளைக் கொண்டு வாழ்கின்றது; மற்ற இனமெல்லாம் இடம் விட்டு இடம் ஓடியும் பறந்தும் உயிர் வாழ்கின்றன. மரவினம் இருந்து வாழ்கின்றது, மற்ற இனம் அலைந்து வாழ்கின்றது. இந்த வேறுபாட்டிலேதான் மரவினத்துக்கு ஏதோ தனிப்பெருமை இருக்க வேண்டும்.

இருந்து வாழ்வோரிடத்திலேதான், திரிந்து வாழ்வோர் வந்து வந்து நலம் அடைய வேண்டியிருக்கும். தம்மிடம் வருவோர்க்கு இல்வாழ்வாரைப் போல மரவினம் உதவி செய்த படியே உள்ளது. மற்றெல்லா உயிர்களுக்கும் பயன்படுதலுடைமையே மரவினத்தின் தனி மாண்பு!

உணவு உடை நிழல் முதலிய எல்லாத் தேவைகளையும் மற்ற உயிர்களுக்கு மரவினம் தருகின்றது; தொழிற் கருவிகள் பலவும், வாணிபப் பொருள்கள் பலவும் மரவினம் தருகின்றது; கல்விப் பயிற்சி, கலைப்பயிற்சி, ஞானப் பயிற்சிக்குரிய வாய்ப்புகளையும் மரவினம் தருகின்றது; மரவினத்தால் மற்ற உயிர்களுக்கு வாழ்வு! இயற்கை யமைப்பு இப்படியிருப்பதனால், மற்ற உயிர்கள் தம் வாழ்வுக்கு மரவினத்தை யன்றிப் பிறவினத்தை ஏன் நோக்க வேண்டும்; நோக்கா திருத்தலன்றோ இயற்கையோடு ஒத்த வாழ்வு! எளிய இனிய மெய் வாழ்வு!

செய்திப் பகுதி:

(மாம்பாக்கம்)

குருகுலத்தார்

சுற்றுப் பயணம்

[நாடெங்கும் உலாவித் தொண்டுகள் புரிவர்; தொண்டுக் களன் இறை திருமுன்னிலைகள்! குருகுல இயக்கம் திருக்குறள் இயக்கம்! மன்பதைத் தொண்டே, குருகுலத் தொண்டு! சேரவாரும் செந்தமிழ் நாட்டீர்!]

பெரியோர் பாடல் பெற்ற இறை திருமுன்னிலைகளையே தொண்டுக் களங்களாகக் கொண்டு மக்கட்கு ஆக்கப்பணி செய்தலை இக் குருகுலம் மேற்கொண்டிருக்கின்றது. இம்முறைப்படி, நாட்டில் உள்ள எல்லாப் பாடல் பெற்ற திருக்கோயில்களும் இக் குருகுலத் தொண்டுகட்குக் கிளை அருளிடங்களாய் உதவலாம்.

முன்பெல்லாம், கல்வி, தொழில், மருத்துவம், கண்காட்சி, பட்டிமன்றம் போன்ற செய்கைகளுக்குத் திருக்கோயிலின் சுற்றிடங்கள் உதவியாய் இருந்ததுண்டு. திருவருள் ஈடுபாட்டுடன் இவை பலவும் செய்யும் வழக்கம் அமைந்திருந்தது.

பெரியோர் பாடல் பெற்ற இடங்கள் மிக்க ஆற்றல் வாய்ந்த திரு முன்னிலைகள்! மின் இயக்கம் மிக்க ஆற்றலுடையதேயாயினும், பயன் கொள்ளும் கருத்தில்லாதவர்க்கு அதனால் நலம் ஏது? தலங்களைப் பயன் கொள்ளும் ஊக்கமிருந்தால், அவை மற்ற இடங்களைவிட ஆற்றலாக உதவும்; அப்படிப் பயன் செய்யும் கருத்திருக்கின்றது.

இதற்கு, நாட்டின் ஒத்துழைப்பும் அரசின் இணக்க உதவியும் சான்றோர் பெருமக்கள் துணையும் இருப்பது நல்லது.

மாம்பாக்கம் குருகுலத்தார் அவ்வப்போதும் நாடுகள் தோறும் இதற்காகச் சுற்றுப் பயணம் செய்துவருகின்றனர். அங்கங்கும் முதல்வன் திருமுன்னிலைகளில் வழிபாடுகளுடன் மக்களுக்காக இயன்ற தொண்டுகளும் ஆற்றி வருகின்றனர்.

Phone 55034 Tel. Enkayam
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட் மார்க்



பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்,
53, கிடங்குத்தெரு. சென்னை 1.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்.).